## மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு

## சமூக சேவைகள் திணைக்களம்

### சமூக சேவைகள் திணைக்களத்தின் தரம் 1 இன் சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை – 2022

*சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் கடமை புரியும் தரம் 1 இன் சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை 2022 ஆம் ஆண்டு நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றேன்.*

01. *பரீட்சை தொடர்பான வாரங்கள்* **:**

| **வினாப் பத்திரம் /விடயப் பரப்பு** | **காலம்** | **மொத்தப் புள்ளிகள்** | **சித்தியடைந்த புள்ளிகள்** |
|---|---|---|---|
| **பொருளியல்** | 01 ½ **மணித்தியாலம்** | 100 | **40** |
| **சமூகவியல்** | 01 ½ **மணித்தியாலம்** | 100 | **40** |
| **உளவியல்** | 01 1/2 **மணித்தியாலம்** | 100 | **40** |

**02. நடாத்தும் அதிகாரி : சமூக சேவைகள் பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூலம் பரீட்சை நடாத்தப்படும்.**

**03.பரீட்சைக்கான பாடத்திட்டம்**

| **வினாப்பத்திர இலக்கம்** | **பாடத்திட்டம்** |
|---|---|
| **பொருளியல்** | **பொருளியல் அறிமுகம், உற்பத்தி மற்றும் செலவு விதிகள், வளைகோட்டுப் பகுப்பாய்வு, சந்தை அமைப்பு மற்றும் சந்தை மாதிரி, குறைந்து செல்லும் எல்லைப் பயன் விதி மற்றும் குறைந்து செல்லும் விளைவு விதி மற்றும் நிதி பிசுக்கால் கொள்கைகள், தேசிய வருமானத்தின் சுழற்சியான பிரவேசம், பணவீக்கம் மற்றும் வேலையின்மை, திறந்த பொருளாதார பெரும்பாக கொள்கைகள்** |
| **சமூகவியல்** | **சமூகவியல் விதிகள், கோட்பாடுகள் மற்றும் ஆராய்ச்சி முறைகள், சமூக ஏற்றத் தாள்வுகள் மற்றும் சமூகப் பிரச்சினைகள், சமூகமயமாக்கம் மற்றும் சமூக அடுக்கமைவு முறைகள், குடுப்ப அமைப்பு மற்றும் இடைத் தொடர்புகள்** |
| **உளவியல்** | **பொது உளவியல், சமூக உளவியல், சிறுவர் உளவியல், முதியோர் மற்றும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான மதியுரை** |

**04.** உத்தியோகத்தர் ஒருவருக்கு II ஆவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்கு உரிய பாடங்களுக்காக ஒரே தடவையில் அல்லது வெவ்வேறான பல சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும்.

**05.** பரீட்சை மொழி மூலம்

I. பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும்.
II. பரீட்சார்த்திகள் விரும்பும் ஒரு மொழியில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.
III. பரீட்சார்த்தி அரச சேவையில் இணைவதற்காக தோற்றிய போட்டிப் பரீட்சை மொழிமூலம் அல்லது போட்டிப் பரீட்சை இன்றி அரச சேவையில் இணைந்து கொண்ட நபர்கள் தொடர்பில் அரச சேவையில் இணைவதற்கு தகைமை பெற்ற பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் விடையளிக்க முடியும்.

**06.** பரீட்சார்த்தி ஒருவருக்கு உரித்தாகாத ஒரு மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றுவதாக தெரியவருமாயின் அவரது பரீட்சார்த்த தன்மை நீக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

**07.** விண்ணப்பங்கள் கீழே காட்டப்படும் மாதிரிக்கு அமைய A-4 அளவு கடதாசியின் இரண்டு பக்கங்களும் பயன்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். சிங்கள விண்ணப்பத்தில் பரீட்சையின் பெயர் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பத்தில் பரீட்சையின் பெயர் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடல் வேண்டும். ஏற்புடைய தகவல்கள் தனது கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்கப்படல் வேண்டும்.

**08.** விண்ணப்பங்கள் 2022.11.25 அல்லது அதற்கு முன்னர் சமூக சேவைகள் பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம், 2 ஆம் மாடி, II ஆம் கட்டம், செத்சிரிபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கடிதவுறையின் இடப்பக்க வலது மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**09.** பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பாடத்துக்காகவும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தனது அடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும். அதற்காக பின்வரும் எந்தவொரு ஆவணமும் ஏற்றுக்காள்ளப்படும்.

i. தேசிய அடையாள அட்டை
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

**10.** இப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடம் பின்வரும் அடிப்படையில் பரீட்சைக் கட்டணங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏற்புடைய பரீட்சைக் கட்டணம் சமூக சேவைகள் பணிப்பாளரின் வருமானத் தலைப்பு **7041285** இற்கு செலவு வைக்கும் வகையில் நாட்டின் எந்தவொரு இலங்கை வங்கி கிளையிலும் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் ஒரு ஓரத்தை மாத்திரம் ஒட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவும். (பற்றுச்சீட்டின் பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் பயனளிக்க கூடும்.)

***(அ) முதலாவது தடவை (முழுமையான பரீட்சைக்கு அல்லது ஒரு பகுதிக்கு கட்டணம் அறவிடப்பட மாட்டாது)***

***(ஆ) அதன் பின்னர் ஒரு தடவைக்காக***

**முழுமையான பரீட்சைக்கு – ரூ.1200.00**

**ஒரு பாடத்துக்காக – ரூ.600**

**11.** *பரீட்சையினை நடாத்துதல் தொடர்பில் சமூக சேவைகள் பணிப்பாளரால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டுள்ளார்கள். அந்த சட்டவிதிகள் மீறப்படுமாயின் சமூக சேவைகள் பணிப்பாளரால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுவதற்கு அவருக்கு நேரிடும். மேலும், நாட்டில் பின்பற்றப்படும் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கும் பரீட்சாரத்திகள் கட்டுப்படல் வேண்டும்.*

**12.** *சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் வெளியாகும் இவ் அறிவித்தலின் மொழி சொற் பிரயோகங்களுக்கு இடையில் ஏதேனும் பொருத்தமின்மை அல்லது இசைவின்மை உள்ளதாக தெரிய வருமாயின் அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் சிங்கள ஊடக அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.*

**13.** *இவ் அறிவித்தல் மூலம் உள்ளடக்கப்படாத ஏதேனும் ஒரு விடயம் காணப்படின் அது தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளும் உரிமை சமூக சேவைகள் பணிப்பாளருக்கு உண்டு.*

*அனோஜா ஹேரத்*
*சமூக சேவைகள் பணிப்பாளர்*
*சமூக சேவைகள் திணைக்களம்*

**2022** *நவம்பர் மாதம் 02 ஆம் திகதி வியாழக்கிழமை*
*பத்தரமுல்ல*
*செத்சிரிபாய*
*சமூக சேவைகள் திணைக்களத்தில்.*

***சமூக சேவைகள் திணைக்களத்தின் தரம் 1 இன் சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை – 2022***

***Second Efficiency Bar Examination for Social Services Officer of the Department of Social Services – 2022***

உத்தியோகத்தர் தோற்றும் மொழிமூலம் : சிங்களம் **- 2** ☐
தமிழ் **- 3** (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

(பரீட்சையின் பெயர் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்)

**01. (i)** முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) **:**
*உதா* **:- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA**
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

**(ii)** இறுதிப் பெயர் முதலாவதாகவும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் அதன் பின்னரும் குறிப்பிடப்பட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்)
உதா **:-KUMARA H.M.S.**
……………………………………………………………………………………………

**(iii)** முழுப் பெயர் **(**சிங்களத்தில் **/** தமிழில்**):**
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

**02.** முகவரி **:-**

**(i)** பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்)**:**……………………………………………………………………………
……………………………………………………………………………………………
…………

**(ii)** அலுவலக முகவரி **(**சிங்களத்தில் **/** தமிழில்**):**
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

**03.** தேசிய அடையாள அட்டை இல **:** ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

**04.** ஆண் **/** பெண் பால்நிலை **:**
ஆண் **- 0** ☐
பெண் **- 1** (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

**05.** கையடக்கத் தொலைபேசி இல.: ☐☐☐☐☐☐☐☐☐☐

**06.** அறிவித்தலின் *01* ஆம் பந்தியின் கீழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாட இலக்கத்துடன் பரீட்சைக்குத் தோற்றும் பாடங்களைச் சரியாக குறிப்பிடுதல் வேண்டும்.

| பாட இலக்கம் | பாட எண் |
|---|---|
| | |
| | |
| | |

**07.** *பிறந்த திகதி* **:** ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

**08.** *இப் பரீட்சைக்கு முன்னர் முழுமையாக அல்லது ஒரு பகுதிக்குத் தோற்றியிருப்பின் அவ்வாறு தோற்றிய ஆண்டு, பாடம் மற்றும் மொழிமூலத்தைக் குறிப்பிடவும்.*

| ஆண்டு ய | பாடம் | மொழிமூலம் |
|---|---|---|
| ........................ | ........................................ | .................................... |
| ........................ | ........................................ | .................................... |

**09.** பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரம் **:**

**(i)** பரீட்சைக் கட்டணம் செலுத்திய வங்கி மற்றும் கிளை**:** .............................................................

**(ii)** பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி **:** ...............................................................................

**(iii)** செலுத்திய தொகை **:** ..............................................................................................................

*பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும் (ஏற்புடையதாயின் மட்டும்)*

**10.** *மேலே காட்டப்பட்டுள்ள விபரங்கள் சரியானதெனவும், விண்ணப்பத்தில் காட்டப்பட்டுள்ள மொழிமூலத்தில் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்து உண்டு எனவும், பரீட்சை தொடர்பான சகல சட்டவிதிகளுக்கும் இணங்குவதாகவும் வெளிப்படுத்துகின்றேன். மேலும், பரீட்சையினை நடாத்துதல் தொடர்பாக சமூக சேவைகள் பணிப்பாளரால் விதிக்கப்படும் சட்டவிதிகள் மற்றும் பரீட்சை முடிவுகளை வெளியிடுதல் தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு கட்டுப்படுவதாகவும் வெளிப்படுத்துகின்றேன்.*

............................................ ...................................................

திகதி பரீட்சார்த்தியின் கையொப்பம்

*சமூக சேவைகள் பணிப்பாளர் :*

இந்த விபரங்களில் காட்டப்படும் பரீட்சார்த்திக்கு இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை உள்ளதெனவும் விண்ணப்பத்தில் அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலத்தில் தோற்றுவதற்கு தகைமை உள்ளதெனவும் நான் உறுதி செய்கிறேன்.

பணம் செலுத்திய பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் வெளிப்படுத்துகிறேன். **(*)**

.................................. ..................................................

திகதி கிட்டிய மேற்பார்வை உத்தியோகத்தரின் கையொப்பம்,
பதவிப் பெயரும் பதவி முத்திரையும்

***(*)*** *கட்டணம் செலுத்த தேவையில்லை எனின் வெட்டிவிடவும்.*